10.10.2025. O.S.No.174 of 2024

P.W.1 - லட்சுமி த/பெ. விநாயகம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னிடம் காண்பிக்கப்படுவது என் அம்மா 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் ஆமாம். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆவணத்தை பார்த்து கையொப்பங்களை பார்த்து சாட்சியம் சொல்லும்படி சொன்னதின் பெயரில் சாட்சியிடம் மீண்டும் ஆவணம் கொடுக்கப்பட்டு சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு 1ம் பிரதிவாதிக்கு என் அம்மா எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் என்று சாட்சியம் அளிக்கிறார். அதில் 2வது சாட்சியாக நானும், முதல் சாட்சியாக என் அக்காவும் கையொப்பம் போட்டுள்ளோம் என்றால் சரிதான்.

அந்த பத்திரம் எழுதிக்கொடுக்கும்போது 1ம் பிரதிவாதி எங்களுக்கு பணம் ஏதாவது கொடுத்தாரா என்றால் இல்லை. என் அம்மாவிற்கும் பணம் கொடுக்கவில்லை. நான் பணம் கொடு என்று கேட்டேனா என்றால் நான் எதுவும் கேட்கவில்லை. என் அண்ணன் சம்பாதித்தது எல்லாம் அம்மாவிடம்தான் கொடுத்தார். அதனால் என் அம்மா எதுவும் மகனுக்கு செய்ய முடியவில்லை என்று என் அண்ணனுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார். அந்த பத்திரத்தை நான் படித்து பார்த்து கையொப்பம் போட்டேனா என்றால் கையொப்பம் மட்டும் போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்க்கவில்லை.

என் அம்மா சொத்தில் பாகம் கொடு என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. என் அம்மாவும் என் அண்ணன் 1ம் பிரதிவாதியிடம் என் மகள்களுக்கு பணம் கொடுக்கவில்லை அவ்வாறு பணம் கொடுக்கவில்லை என்றால் செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிடுவேன் என்று சொன்னாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. அவருக்காக கொடுப்பதாகத்தான் சொன்னார். வீடு கட்டுவதற்கு மொத்தமாக ரூபாய் 10 லட்சம் செலவானதாக சொல்லும் நான் இரண்டு வீடுகளுக்கும் சேர்ந்தா அல்லது ஒரு வீட்டிற்காகவா என்றால் இரண்டாவதாக கட்டிய வீட்டிற்கு. மேற்சொன்ன விவரத்தை நான் தாவாவில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

என் தம்பி ஓய்வு பெற்ற பின்னர் இரண்டாவதாக கட்டிய வீட்டில்தான் வசித்து வருகிறார். கிரகபிரவேஷத்திற்கு என் தம்பி என்னை அழைத்தாரா என்றால் என் அப்பா, அம்மாதான் செய்தார்கள் அவர்கள்தான் என்னை அழைத்தார்கள். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் அளவு தெரியுமா என்றால் அளவு 10 செண்ட், சர்வே எண் தெரியும் ஆனால் சரியாக தற்போது நினைவில்லை. என் அம்மா 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் வீடு உள்ளதா என்றால் பழைய வீடு என்று சொன்னேனே அந்த வீடு உள்ளது. என் பிரமாண வாக்குமூலத்தில் என் தந்தை வீடு கட்டினார் என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். என் தந்தை உயிருடன் இருந்தபோது என் சகோதரர்கள் இருவரையும், எங்களையும் அழைத்து பணம் வாங்கி தருகிறேன் சொத்தை விட்டுவிடுவதாக சொல்லும் சமயத்தில் வேறு யார் இருந்தது

என்றும், அதற்கு ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் வெளி ஆட்கள் யாரும் இல்லை, என் அம்மா உடன் இருந்தார், ஆவணம் எதுவும் எழுதவில்லை, அவ்வாறு பேசியது வீடு கட்டி முடிந்தவுடன் இரண்டு வருடங்களில் பேசினார். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு பணம் கொடுத்தால் சொத்தின் உரிமையை விட்டுத்தருவதற்காக ரூபாய் 10 லட்சம் கொடுத்தால் ஒப்புக்கொள்வதாக என் அப்பா உயிருடன் இருந்தபோது சொன்னது உண்மைதான். அந்த பணத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் பணம் கொடுக்கவில்லை என்றால் சொத்து வேண்டும் என்று கேட்கிறேன். நான் பணம் கேட்டுதான் வழக்கு போட்டிருக்க வேண்டும் என்றும், பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

என் அண்ணன் ஒரு வீட்டிலும், என் தம்பி ஒரு வீட்டிலும் உள்ளனர். அதை இதுவரை நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான். என் முதன்மை சாட்சியத்தில் என் தம்பி தாக்கல் செய்த பதிலுரை குறித்து எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் என்ன சொல்லியுள்ளது என்று சரியாக தெரியவில்லை. வா.த.சா.ஆ.5 EB Card எந்த வீட்டிற்காக EB Card என்றால் என் அம்மா கொடுத்த EB Card, எந்த வீட்டினுடையது என்று தெரியவில்லை. இரண்டு வீடுகளின் கதவு எண்கள் தெரியாது. மின் இணைப்பு என் அப்பா பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.6 கதவு எண் 90/4 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது புது வீட்டினுடைய ரசீது ஆகும். என் அண்ணன் உள்ள வீட்டின் கதவு எண் 149/1 என்று என் வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அந்த வீடா என்று

தெரியாது. என் அம்மா கொடுத்த ஆவணம். என் தம்பி கதவு எண் 149/2 என்ற வீட்டில் குடியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியாக தெரியவில்லை. இருவரும் புதிய வீட்டில் குடியிருக்கிறார்கள். நான் தாக்கல் செய்துள்ள EB Card, சொத்து வரி ரசீது, குடிநீர் வரி ரசீது ஆகியவை இந்த வழக்கு சொத்திற்கு சம்பந்தம் இல்லாதவை என்றால் சரியல்ல. பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தில் நான் கூட்டாக அனுபவத்தில் இல்லாததால் நான் தாவா சொத்தில் கூட்டு அனுபவ உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. கூட்டு அனுபவத்தில் இருந்ததற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த வீடு கட்டியவுடன் எங்களுக்கு திருமணம் செய்து விட்டார்கள், அந்த வீட்டிற்கு வருவோம், போவோம் தங்குவோம். தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றும் ஏற்கனவே என்னுடைய உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டேன் என்றும், நீதிமன்ற கட்டணம் தவறானது என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

என் அண்ணன் மகளுக்கு என் தம்பி ஆறு சவரன் நகை கொடுத்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. என் அண்ணன் மகன் என் தம்பியையும், தம்பி மனைவியையும் அடித்து அது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் முதலில் என் அம்மாவை அடித்தது சம்பந்தமாக பிரச்சினை ஏற்பட்டு இந்த சம்பவம் நடந்தது உண்மை. அது சம்பந்தமாகத்தான் புகார் கொடுத்தோம்.

2 ம் பிரதிவாதியை அலைக்கழிக்கவே 1 ம் பிரதிவாதியுடன் சேர்ந்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் அண்ணன் தான் கொடுத்தார் என்றும், என் அம்மா கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தவறான சங்கதிகளின் அடிப்படையில் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2025.10.10 17:31:45 +0530